# நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்.

**முன்னிலை** :- செல்வி.N.G.சிந்து, **B.A., L.L.B.,**
**நீதித்துறை நடுவர்,**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம்,**
**கோயம்புத்தூர்.**

*2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23-ம் நாள் திங்கட்கிழமை*

திருவள்ளுவராண்டு, 2056, விசுவாவாசு வருடம், மாசி திங்கள் 11 ம் நாள் திங்கட்கிழமை)

## ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் : 1836/*2022*

## ***CNR No: TNCBOA****-037287-2022*

**அரசுக்காக** :-

காவல் உதவி ஆய்வாளர்,

மத்திய அனைத்து மகளிர் காவல்நிலையம்
(துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய)

(காவல் நிலைய குற்ற எண் : 40/2021) ... புகார்தாரர்

... எதிர்...

1. நித்தீஸ்(28) த/பெ.நாகேந்திரன்
2. நாகேந்திரன்(55) த/பெ. தங்கப்பன்
3. லட்சுமி(47) க/பெ.நாகேந்திரன்
4. ஹரீஸ்(23) த/பெ. நாகேந்திரன்
5. சரவணன்(46) த/பெ. நாகேந்திரன்
6. தானுமூர்த்தி (55) த/பெ. முத்துகிருஷ்ணன். ... எதிரிகள்

| | | |
|---|---|---|
| (மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:- **R**.**O**.**C**. **No**. 814/2020/**RG**/**F**1, நாள்: 07.04.2021-ன் படி) | | |
| 1 | குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருந்த காலம் | --- |
| 2 | இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | 26.08.2022 |
| 3 | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | பொருந்தாது |
| 4 | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | 09.07.2025 |
| 5 | கு.வி.மு.ச. பிரிவு 317-ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | Discharge Petition filed on CMP.No.41730/2023 dated 22.09.2023 and Dismissed on 03.06.2025 |
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | (see table below) |

| சாட்சிகள் | சாட்சி பெயர் | முதல் விசாரணை | எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை |
|---|---|---|---|
| அ.சா.1 | சசிரேகா | 26.09.2025 | 26.09.2025 |
| அ.சா.2 | வேலவேந்தன் | 26.09.2025 | 26.09.2025 |
| அ.சா.3 | ஸ்ரீவித்யா | 26.09.2025 | 26.09.2025 |
| அ.சா.4 | திருமதி. | 31.10.2025 | 31.10.2025 |

| | | |
|---|---|---|
| | | (nested: \| \| பக்கியலட்சு மி \| \| \|) |
| 7 | பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தேதி | 20.02.2023 |
| 8 | பிடியாணை விலக்கப்பட்ட தேதி | 28.03.2023 |
| 9 | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | 06.11.2025 |
| 10 | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | இல்லை |
| 11 | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | இல்லை |

| குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106-ன் படியான விவரப்பட்டியல் | | |
|---|---|---|
| 1. | வரிசை எண் | C.C.No.1836/2022 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | மத்திய அனைத்து மகளிர் காவல்நிலையம்<br><br>(துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய) குற்ற எண் 40/2021 |

| | | |
|---|---|---|
| 3. | எதிரிகளின் பெயர்கள் | 1. நித்தீஸ்(28) த/பெ.நாகேந்திரன்<br>2. நாகேந்திரன்(55) த/பெ. தங்கப்பன்<br>3. லட்சுமி(47) க/பெ.நாகேந்திரன்<br>4. ஹரீஸ்(23) த/பெ. நாகேந்திரன்<br>5. சரவணணன்(46) த/பெ. நாகேந்திரன்<br>6. தானுமூர்த்தி (55) த/பெ. முத்துகிருஷ்ணன். |
| 4. | தந்தையாரின் பெயர் | |
| 5. | தொழில் | |
| 6. | குடியிருப்பு | |
| 7. | வயது | |
| 8. | சம்பவம் நடந்த தேதி | 18.12.2019 |
| 9. | முறையீடு செய்யப்பட்ட தேதி | 31.12.2021 |
| 10. | கைது செய்யப்பட்ட தேதி | -- |
| 11. | பிணையில் விடுவித்தல் | எதிரிகள் மாண்புமிகு மவாட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற CMP.No.145/2022 தேதி 28.01.2022 ன் உத்தரவின்படி முன்ஜாமீன் பெற்று பிணையில் உள்ளார்கள். |
| 12. | ஒப்படைத்தல் /அனுப்பிவைத்தல்-ன் தேதி | இல்லை |
| 13. | விசாரணை துவங்கப்பட்ட தேதி | 29.07.2025 |
| 14. | விசாரணை முடிவடைந்த தேதி | 06.11.2025 |
| 15. | தண்டனை அல்லது உத்தரவு | ***முடிவில்***, எதிரிகளின் மீது இதச சட்டப் பிரிவுகள் 498(A), 406 and sec 4 of DP Act ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமாகாததால், அவர் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, பி.என்.எஸ்.எஸ்.271(1)-ன் |

| | | |
|---|---|---|
| | | படி அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது. |
| 16. | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு / முடிவு | எதிரிக்கு தீர்ப்புரையின் நகல் வழங்கப்படவில்லை. |
| 17. | காலதாமதத்தின் விளக்கம் | - |

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 13.09.2022 ம் தேதியன்று இந்நீதிமன்ற வழக்குக் கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இறுதியாக 23.02.2026 ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது, அரசுத் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-II அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர்கள் Mr.G.பிந்து, B,A., B.L., மற்றும் Mr.R.Balakrishnan, B.B.A.,L.L.B., (Hons) and Mrs.A.Freeda, B.SC., L.L.B., அவர்கள் ஆஜராகி, இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்த பின்பு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

***<u>தீர்ப்புரை</u>***

இவ்வழக்கானது மத்திய அனைத்து மகளிர் காவல்நிலையம் (துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய) காவல் உதவி ஆய்வாளர் அவர்களால், கு.வி.மு.ச பிரிவு 173(2)ன் கீழ் 26.08.2022 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில், இதச சட்டப் பிரிவுகள் 498(A), 406 and sec 4 of DP Act ன் கீழான குற்றச்சாட்டுகளுக்காக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்காகும்.

2. <u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u> :

கடந்த 11.07.2019 அன்று 1ம் எதிரிக்கும் நிகழ்நிலைபுகார்தாரருக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்றும், அப்போது 2 முதல் 6 எதிரிகள் ரூ.2 லட்சத்தை உறுதிமொழி பணமாக பொற்றுக்கொண்டார்களென்றும், மேலும், திருமணத்திற்கு 100 சவரன் தங்க நகை, 5 கிலோ வெள்ளி MG Hector கார் மற்றும் ஒரு கோடி மதிப்பிலான பிளாட்டை வரதட்சனையாக கேட்டார்கள் என்றும், பின்பு நிகழ்நிலைபுகார்தாரரின் அப்பாவினால் முடிந்த 13 லட்ச ரூபாய் காரை வாங்கித்தருவதாக கெஞ்சி கேட்டார் என்றும், அதன்பின்பு 100 சவரன் நகைகளில் 50 சவரன் நகைகளை 3ம் எதிரி அவரது விருப்பத்திற்கேற்ப மாற்றுவதாக சொல்லி அதற்கான செய்கூலி தொகையும் வாங்கி சென்றார் என்றும், அதன்பின்பு 18.11.2019 அன்று நிகழ்நிலைபுகார்தாரருக்கும், 1ம் எதிரிக்கு திருமணம் நடைபெற்றது என்றும், தாலி கட்டியவுடன் 6ம் எதிரி காறிவிருந்து நடத்த ரூ.50 ஆயிரம் பணம் வேண்டுமென்று சொல்லி நிகழ்நிலைபுகார்தாரரின் அப்பாவிடமிருந்து வாங்கி சென்றார் என்றும், திருமணம் முடிந்து கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தபோது 1 முதல் 3 எதிரிகள் நகைகளை கட்டாயப்படுத்தி வாங்கிக்கொண்டார்கள் என்றும், அதன்பின்பு கார்த்திகை பண்டிக்ககைக்கு ரூ.1,80,000/- ஐ

நிகழ்நிலைபுகார்தாரரின் அப்பாவிடமிருந்து வாங்கிவருமாறு 1 முதல் 3 எதிரிகள் கட்டாயப்படுத்தி வாங்கிக்கொண்டார்கள் என்றும், அதன்பின்பு தல பொங்களுக்கு ரூ.1,50,000/- ஐ நிகழ்நிலைபுகார்தாரரின் அப்பாவிடமிருந்து வாங்கிவருமாறு 1 முதல் 3 எதிரிகள் கட்டாயப்படுத்தி வாங்கிக்கொண்டார்கள் என்றும், அதன்பின்பு நிகழ்நிலைபுகார்தாரரிடமிருந்து போனை புடுங்கி வைத்துக்கொண்டும், உண்ண உணவு தாராமலும், கருவை கலைக்கச்சொல்லியும் கொடுமைப்படுத்தினார்கள் என்றும், அதன்பின்பு கோவை அண்ணப்பூர்ணா ஓட்டலில் வளைகாப்பு நடத்தியபோது எதிரிகள் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றும், குழந்தை பிறந்த பிறகு 1 மற்றும் 3 எதிரிகள் தொழில் தொடங்குவதற்காக ரூ.5 லட்சம் பணமும், 1 கோடி மதிப்பிலான பிளாட்டையும் வாங்கிக் கொடுக்கச்சொல்லி நிகழ்நிலைபுகார்தாரரின் அப்பாவை கட்டாயப்படுத்தினார்கள் என்றும், அதன்பின்பு பணமும் பிளாட்டும் கொடுக்காவிட்டால் 1 ம் எதிரிக்கு வேறு திருமணம் செய்து வைப்பதாக சொன்னார்கள் என்றும், பின்பு சமரச பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதென்றும், அதன்பின்பு 1 ம் எதிரி அன்பாக பேசிவந்தார் என்றும், பின்பு தாலிசெயினில் உள்ள குறையை சரிசெய்வதற்காக கட்டாயப்படுத்தி தாலி செயினை வாங்கிக்கொண்டு சென்ற பிறகு மீண்டும வரவில்லை என்றும், சமரச பேச்சிற்கும் முன்வரவில்லை என்றும், எனவே வரதட்சனை கேட்டு கொடுமை செய்த குற்றத்திற்காக எதிரிகளின் மீது இதச சட்டப் பிரிவுகள் 498(A), 406 and sec 4 of DP Act ன்

கீழ் மத்திய அனைத்து மகளிர் (துடியலூர் அனைத்து மகளிர்) காவல் நிலைய, காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173(2)ன் கீழ் இறுதி அறிக்கை 26.08.2022 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) நகல்கள் வழங்குதல் :**

இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1836/2022 என கு.வி.மு.ச. பிரிவு 190(1)(ஆ)ன் கீழ் 13.09.2022 ம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் இந்த வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் படி 01.09.2023 ம் தேதி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு வனைதல் :**

எதிரிகளுக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்தரம் இருப்பதாக தோன்றியதால் 09.07.2025 ம் தேதியன்று எதிரிகளுக்கு இதச சட்டப் பிரிவுகள் 498(A), 406 and sec 4 of DP Act ன் கீழ் கேள்விகள் கேட்கப்பட்டும், மேலும் இதச சட்டப் பிரிவுகள் 498(A), 406 and sec 4 of

DP Act ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கி வினவியபோதும், எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும், குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

## 5. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :

அரசு தரப்பில் **அ.சா.1 மற்றும் அ.சா.4** சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.3** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :

(6.1) **அ.சா. 1. திரு.சசிரேகா இந்த வழக்கின் நிகழ்நிலை புகார்தரர் ஆவார்.** அ.சா.1 தனது முதல் சாட்சியத்தில் அவருக்கும் 1ம் எதிரிக்கும் 11.07.2019 அன்று திருமண நிச்சயத்தார்த்தம் நடைபெற்றது என்றும், 18.11.2019 அன்று திருமணம் நடைபெற்றது என்றும், அதன்பின்பு 1ம் எதிரிக்கும் அ.சா.1க்கும் குடும்பத்தகராறு ஏற்பட்டது என்றும், பிறகு அ.சா.1ம் அவரது குழந்தையும், அவரது பெற்றோரின் வீட்டில் வசித்து வந்தார்கள் என்றும், பெறியோர்களை வைத்து சமாதானம் பேசியபோது சமாதானம் ஆகாததால் இந்த வழக்கின் புகாரை கொடுத்துள்ளதாக சாட்சியம்

அளித்துள்ளார். மேலும், புகாரில் உள்ள சங்கதிகள் தற்போது நியாபகம் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அவரது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ-1 ஆ**க குறியீடு செய்யப்பட்டது.

(6.2) **அ.சா. 2. திரு.வேலவேந்தன் இந்த வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரரின் அப்பா ஆவார்.** அ.சா.2 தனது முதல் சாட்சியத்தில் அ.சா.1 ன் முதல் விசாரணைக்கு ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

**6.3) அ.சா.3. திருமதி.ஸ்ரீவித்யா** இவர் தனது சாட்சியத்தில் **இந்த வழக்கின் நிகழ்நிலைபுகார்தாரரின் அம்மா ஆவார்.** அ.சா.1 ன் முதல் விசாரணைக்கு ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

**6.4) அ.சா.4. திருமதி.பக்கியலட்சுமி (காவல் உதவி ஆய்வாளர்-ஓய்வு)**. இவர் தனது சாட்சியத்தில் கடந்த 31.12.2021 ம் தேதி மாலை 16 மணிக்கு துடியலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வளராக பணியிலிருந்த போது அப்போது நிலைய அலுவலில் இருந்த தலைமைக்காவலர் திரு.தங்கமணி என்பவரிடம் சசிரேகா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகரைப்பெற்று நிலையக்குற்ற எண் 40/2021 இதச பிரிவுகள் 498(A), 406 மற்றும் Sec 4 of TNPHW Act ன் கீழ்

வழக்கு பதிவு செய்து வாதியின் புகாரையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் சேர்த்து கனம் நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்ற நீதிபதிக்கு அனுப்பிவைத்ததாகவும், பின்னர் தனது பார்வைக்கு வைக்கப்பட் இவ்வழக்கை அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திருமதி. பாண்டியம்மாள் அவரது புலன் விசாணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்ற சாட்சிகள் சசிரேகா, வேலவந்தான், திருமதி. ஸ்ரீவித்யா, இந்திர குமாரி, விவேகானந்தர், அகமதுகான் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், அதன் பின்பு திருமதி.பண்டியம்மாள் பணிமாறுதல் பெற்று வேறு காவல்நிலையம் சென்றதால், இவ்வழக்கை தனது புலன் விசாரணை எடுத்துக்கொண்டு மேற்கண்ட சாட்சிகளை விசாரித்தபோது உதவி ஆய்வாளர் திருமதி. பாண்டியம்மாளிடம் சொன்ன அதே வாக்குமூலம் என்னிடமும் சொன்னாதல் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றும், மேற்கண்ட சாட்சிகளை எனது புலன்விசாரணையில் மேற்கண்ட சம்பவம் உண்மை என தெரிய வந்துதால், இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரிகள் 1 முதல் 6 வரையிலானவர்கள் கோவை மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முண்பிணையம் பெற்று நிலையில் அவர்களை கைது செய்யவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த தலைமைக்காவலர் திரு.தங்கமணி மற்றும் இவ்வழக்கின் முதல் விசாரணை மேற்கொண்ட திருமதி.பாண்டியம்மாள் ஆகியோர்களை விசாரித்து அத்துடன்

எனது புலன் விசாரணை முடித்து மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவரது முதல் விசாரணையின் மூலமாக **அ.சா.ஆ.2** மற்றும் **அ.சா.ஆ.3** சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

**7. கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி வினவுதல்:**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில், எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து, கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின் படி 06.11.2025 ம் தேதி வினவியபோது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை பொய் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

8. **தீர்வுக்குரிய பிரச்சனை** :

**எதிரிகளின் மீது** இதச சட்டப் பிரிவுகள் 498(A), 406 and sec 4 of DP Act ன் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து அரசு தரப்பில் சந்தேகமற நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

9. **தீர்வு**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு ஆவணங்கள், சாட்சிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அ.சா.1 முதல் அ.சா.3 தங்களது முதல் விசாரணையில் பிறழ்சாட்சியாக சாட்சியாக சாட்சியம்

அளித்திருந்தாலும், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு, அரசு தரப்பு அ.சா.4 ன் சாட்சியத்தின் மூலமாகவும், மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவும் நிரூபிக்கப்பட்டதாகவும், எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமாயும், அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தினை முன்வைத்துள்ளார். மாறாக எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 முதல் அ.சா.3 க்கும், எதிரிகளுக்கும் குடும்ப பிரச்சனை ஏற்பட்டது என்றும் அதனால் அ.சா.1 புகார் கொடுத்துவிட்டதாகவும், அவர்கள் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும், மேலும் இந்த வழக்கை சமரசமாக முடித்துக்கொள்ள குவிமுச பிரிவு 320 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், எனவே, அவர்கள் சமாதானம் ஆகிவிட்டபடியால் எதிரிகள் குற்றமற்றவர்கள் என்றும், எதிரிகளை விடுதலை செய்யவேண்டுமென்றும் வாதத்தினை முன் வைத்துள்ளார்.

10. அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்கும் பொருட்டு, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசுத்தரப்பில் மற்ற பட்டியல் சாட்சிகளை விசாரிப்பதிலிருந்து விலக்கு கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

11. இந்த வழக்கில் அ.சா.1 தனது முதல் விசாரணையில் தனது புகாரை சங்கதிகளை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அவரது முதல் விசாரணையில் அ.சா.1 க்கு எதிரிகளுக்கும் இடையே இருந்து குடும்பபிரச்சனையின் காரணமாக எதிரிகளின் மீது புகார் கொடுத்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், புகாரில் உள்ள சங்கதிகள் அவருக்கு நியாபகம் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அவர் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக தனது முதல் விசாரணையில் சாட்சியம் அளிக்காததால் அரசுத்தரப்பில் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அவர் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். இந்த வழக்கில் அ.சா.2 மற்றும் அ.சா.3 தனது முதல் விசாரணையிலும் தனது குவிமுச பிரிவு 161 வாக்குமூலத்திற்கு ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அவரது முதல் விசாரணையில் அ.சா.1 னு, எதிரிகளுக்கும் இடையே இருந்த குடும்பப்பிரச்சனையின் காரணமாக எதிரிகளின் மீது புகார் கொடுத்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அவர் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக தனது முதல் விசாரணையில் சாட்சியம் அளிக்காததால் அரசுத்தரப்பில் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அவர் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். மேலும் எதிரிகள் தரப்பில் அ.சா1 முதல் அ.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யாததால் குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

12. அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களை கருதும்பொழுது அவரின் சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கிற்கு சாதகமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. இந்நிலையில் அரசுத்தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் எஞ்சியுள்ள சாட்சி புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியம் மட்டுமே ஆகும். அவர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.4 வழக்குக்கோப்பின் அடிப்படையில் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்திருந்தாலும், அவரது சாட்சியம் அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.4 ஆகியோர்களின் சாட்சியங்களை ஆராயும்பொழுது அந்த சாட்சியங்கள் எதுவும், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் விதமாக எந்தவித சாட்சியம் அளிக்கவில்லை. ஆகவே அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கினை வலு சேர்க்கும் விதமாக அமையவில்லை என்றும், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டினை தீர்மானிக்க எந்த வகையிலும்

பலனளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அ.சா.1 முதல் அ.சா.3 ன் சாட்சியம் இந்த வழக்கிற்கு எவ்வகையிலும் பலன் அளிக்காத நிலையில், அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரிகளின் மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்க போதுமானதாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. இவ்வழக்கு சம்பவத்தில், அ.சா.1 தான் பாதிக்கப்பட்ட நபர் ஆவார். அவர் அரசு தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளது அரசு தரப்பு வழக்கின் மீது மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது. அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் குற்றம் புரிந்ததாகவோ, எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாகவோ முடிவு செய்ய இயலாது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே அ.சா.4 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து, எதிரிகள் குற்றவாளிகள் என கருத முடியாது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்ட சாட்சியங்களும், எதிரிகளை குற்றச்சாட்டுடன் சந்தேகத்திற்கு இடமின்றி இணைக்கும் வகையில் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

16. **இறுதியாக,** அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகளின் மீது இதச சட்டப் பிரிவுகள் 498(A), 406 and sec 4 of DP Act ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு, அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகள் விடுதலை செய்வதே நீதியின்பால் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இறுதியாக இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது. எனவே அரசுத்தரப்பு வழக்கில் ஏற்பட்ட சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக வழங்கி, அவரை குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

18. ***முடிவில்***, எதிரிகளின் மீது இதச சட்டப் பிரிவுகள் 498(A), 406 and sec 4 of DP Act ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமாகாததால், அவர் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, பி.என்.எஸ்.எஸ்.271(1)-ன் படி அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.

19. இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, அதனால் வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

## 20.இழப்பீடு

இந்த வழக்கின் பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்கள் பிறழ்சாட்சியமாக சாட்சியம் அளித்துள்ளபடியால் இழப்பீடு பெற எந்தவெறு பரிசீலனையும் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ம் நாள் திங்கட்கிழமை அன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SINDHU GOPALSAMY Digitally signed by SINDHU GOPALSAMY

நீதித்துறை நடுவர்
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

**அட்டவணை :**
**அரசுத் தரப்பு சாட்சிகள்** :

| சாட்சி எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | முதல் விசாரணை செய்த தேதி | அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த தேதி | எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த தேதி |
|---|---|---|---|---|
| அ.சா.1 | சசிரேகா | 26.09.2025 | 26.09.2025 | -- |
| அ.சா.2 | வேலவேந்தன் | 26.09.2025 | 26.09.2025 | -- |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.3 | ஸ்ரீவித்யா | 26.09.2025 | 26.09.2025 | -- |
| அ.சா.4 | திருமதி. பாக்கியலட்சுமி (காவல் உதவி ஆய்வாளர்) | 31.10.2025 | -- | 31.10.2025 |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்** :

அ.சா.ஆ.1 - புகாரில் உள்ள கையெழுத்து

அ.சா.ஆ.2 - புகார்

அ.சா.ஆ.3 - முதல் தகவல் அறிக்கை

**அரசுத் தரப்பு சான்றுப் பொருட்கள் : இல்லை**
**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை
**பின்குறிப்பு** :

1. வழக்கு விசாரணையின்போது, எதிரிகள் பிணையில் இருந்து வந்துள்ளார்.

2. சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. முடிவு அறிக்கை காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

4. எதிரிகளை விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

SINDHU GOPALSAMY Digitally signed by SINDHU GOPALSAMY

நீதித்துறை நடுவர்
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.